புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்

38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.

No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 · இதழ்: 310 · 15-05-2026 · வெள்ளி · பக்கம்- 4 · விலை- ரூ.5 · திருச்சி- புதுச்சேரி

Volum 01 · Issue: 310 · 15-05-2026 · Friday · Pages - 4 · Price- Rs. 5 · Trichy-Puducherry

## கேரள முதல்வராகிறார் வி.டி.சதீசன்

### காங்கிரஸ் தலைமை தேர்வு



புதுடெல்லி: மே.15–

கேரள காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர்களின் தலைவராக வி.டி. சதீசன் நியமிக்கப்படுவதாக காங்கிரஸ் தலைமை அறிவித்துள்ளது.

காங்கிரஸ் செய்தித் தொடர்பு பொதுச் செயலாளர் ஜெயராம் ரமேஷ், காங்கிரஸ் கட்சியின் மேலிட பார்வையாளர்கள் அஜய் மக்கான், முகுல் வாஸ்னிக், கேரள மாநில காங்கிரஸ் பொறுப்பாளர் தீபா தாஸ்முன்ஷி ஆகியோர் டெல்லியில் உள்ள காங்கிரஸ் தலைமையகத்தில் நேற்று (வியாழக்கிழமை) செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது பேசிய தீபா தாஸ்முன்ஷி, “காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் மே 7ம் தேதி திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. அதில், காங்கிரஸ் சட்டமன்றக் குழு தலைவரை தேர்வு செய்யும் பொறுப்பு காங்கிரஸ் தலைவருக்கு வழங்கப்படுவதாக ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதையடுத்து, காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, கேரள காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர், கேரளாவில் உள்ள காங்கிரஸ் மூத்த தலைவர்கள், எம்.பி.க்கள் உள்ளிட்டோரிடம் காங்கிரஸ் தலைவர் ஆலோசனை மேற்கொண்டார். அனைவருடனும் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில், வி.டி.சதீசன் கேரள காங்கிரஸ் சட்டமன்றக் குரு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்” என தெரிவித்தார். இதன்மூலம், கேரளாவின் அடுத்த முதல்வராக வி.டி. சதீசன் பதவியேற்க உள்ளார்.

நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 140 தொகுதிகளில், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி (யுடிஎஃப்) 102 இடங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைக்கும் தகுதியைப் பெற்றது. இதில், காங்கிரஸ் 63 இடங்களில் வெற்றி பெற்றது. இதையடுத்து, கேரளாவின் அடுத்த முதல்வரை தேர்வு செய்வதற்கான முயற்சிகளை காங்கிரஸ் கட்சி தீவிரப்படுத்தியது.

காங்கிரஸ் கட்சியின் மேலிட பார்வையாளர்களான அஜய் மக்கான் மற்றும் முகுல் வாஸ்னிக் ஆகியோர் கடந்த 7ம் தேதி திருவனந்தபுரத்தில் காங்கிரஸ் எம்எல்ஏக்களின் கூட்டத்தைக் கூட்டி ஆலோசனை நடத்தினர். இதில், காங்கிரஸ் கட்சியின் சட்டப் பேரவைத் தலைவராக அதாவது முதல்வராக யாரை தேர்ந்தெடுப்பது என்பது குறித்து ஒவ்வொரு எம்எல்ஏக்களிடமும் தனித்தனியே கருத்துகள் கேட்கப் பட்டன. இதையடுத்து, இந்த கூட்டத்தில் காங்கிரஸ் சட்டப் பேரவைத் தலைவரை தேர்வு செய்வதற்கான முழு அதிகாரத்தையும் காங்கிரஸ் தலைமைக்கு அளிக்கும் ஒருவரி தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதையடுத்து, கடந்த ஒரு வார காலமாக காங்கிரஸ் சட்டப் பேரவைக் குழு தலைவரை தேர்வு செய்வதற்கான ஆலோசனையில் கட்சித் தலைவர் கார்கே ஈடுபட்டு வந்தார். வி.டி.சதீசன், ரமேஷ் சென்னிதாலா, சன்னி ஜோசப், கே.சி. வேணுகோபால் ஆகியோர் இடையே கடும் போட்டி நிலவி வந்ததால் முடிவெடுப்பதில் இழுபறி நிலவி வந்தது. இந்நிலையில், வி.டி. சதீசன், கேரள காங்கிரஸ் சட்டப் பேரவைத் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதையடுத்து, விரைவில் அவரது தலைமையில் கேரளத்தில் கூட்டணி ஆட்சி அமைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி 2% உயர்வு: முதல்வர் விஜய் உத்தரவு



சென்னை: மே.15–

தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 58 சதவீதமாக உள்ள அகவிலைப்படி, மத்திய அரசு ஊழியர்களுக்கு நிகராக 01.01.2026 முதல் கணக்கிடப்பட்டு 60 சதவீதமாக உயர்த்தி வழங்க முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசு செய்திக் குறிப்பு: முதல்வர் விஜய் தலைமையிலான அரசு, மக்கள் நலனை முன்னிறுத்தி மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள உறுதிமொழி அளித்துள்ளது. இந்தத் திட்டங்களை வடிவமைப்பதிலும், அவற்றை முழுவீச்சில் நடைமுறைப்படுத்துவதிலும் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் முக்கியப் பங்கு வகித்து வருகின்றனர்.

அவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, ஒன்றிய அரசுப் பணியாளர்களுக்கு 01.01.2026 முதல் 58 சதவீதமாக உள்ள அகவிலைப்படி 60 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ள நிலையில், மாநில அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களும் அதனால் பயன்பெறும் வகையில், , 01.01.2026 முதல் மாநில அரசுப் பணியாளர்களுக்கும் அகவிலைப்படியை உயர்த்தி வழங்க முதல்வர் பரிசீலித்து உத்தரவிட்டுள்ளார்.

இதனால் 58% ஆக உள்ள அகவிலைப்படி 2 சதவீதம் உயர்ந்து 01.01.2026 முதல் 60 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும். இந்த அகவிலைப்படி உயர்வால், சுமார் 16 லட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள்.

இதனால் ஆண்டொன்றுக்கு அரசுக்கு 1,230 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் நலன் கருதி இதற்கான கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும் என்று அரசு செய்திக் குறிப்பில் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சேலத்தில் தொடங்கப்பட்டது முதல்வர் விஜய் அறிவித்த ‘சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை’ திட்டம்




சேலம்: மே.15–

பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் தமிழக முதல்வர் விஜய் அறிவித்த ‘சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை’ திட்டம் (Singappen Special Force SSF) சேலம் மாநகராட்சியில் நேற்று முதல் தனது பணியைத் தொடங்கியது. முதற்கட்டமாக, மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் பெண் காவலர்கள் ரோந்துப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழக முதல்வராக பதவி ஏற்றதும், முதல்வர் விஜய் பெண்கள் பாதுகாப்புக்கு என தமிழகத்தில் ‘சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை’ தொடங்கப்படும் என்று அறிவித்தார். இந்நிலையில் தமிழகத்தில் முதல்முறையாக சேலம் மாநகர காவல் துறையில் ‘சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை’ திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பெண்களின் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில் , சேலம் மாநகர காவல் ஆணையர் அனில் குமார் கிரி மேற்பார்வையில், சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை” அமைக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை சூரமங்கலம் சரக உதவி ஆணையர் ரமளி ராமலட்சுமி கண்காணிப்பில், எஸ் ஐ., அருள்மொழி. எஸ் எஸ் ஐ., க்கள் அம்சவள்ளி, சத்தியவதி, பெண் தலைமை காவலர்கள் பிரேமலதா, மங்கையர்க்கரசி ஆகியோரைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அதிரடிப்படை வாகனத்தின் ஓட்டுநர் மட்டும் ஆண் காவலர் ஆவார்.

சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் (SSF) செயல்பாடுகள்:

குற்றச்சம்பவங்கள் நடைபெற வாய்ப்புள்ள இடங்களை கண்டறிந்து கண்காணித்தல், .பொது இடங்களில் தொடர்ந்து ரோந்து மேற்கொண்டு, பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குதல், பேருந்து நிறுத்தங்கள், ரயில் நிலையங்கள். கல்வி நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் போன்ற மக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்வது.

சட்டவிரோத மற்றும் பெண்களுக்கு எதிரான செயல்களை தடுக்க விரைந்து நடவடிக்கை எடுப்பது, பெறப்படும் புகார்களுக்கு உடனடி மற்றும் உரிய நடவடிக்கை மேற்கொள்வது.

பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் நபர்களை மீட்டு அவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்வது, தேவையான உதவிகள் மற்றும் ஆதரவுகள் உரிய நேரத்தில் கிடைக்க ஏற்பாடு செய்வது, சமூக நலத்துறை கல்வித்துறை மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவது.

சமூகத்தின் பல்வேறு தரப்பினரையும் இணைத்து பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் பணிகளில் ஈடுபடுவது, பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தடுப்பு மற்றும் பாதுகாப்பு உத்திகளை முதன்மை இலக்காகக் கொண்டு செயல்படுவது, சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் நோக்கங்கள் ஆகும். சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப்படை முதற்கட்டமாக காவல்துறை தலைமையக நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும்.

இச்சிறப்பு படையினருக்கு தேவையான நான்கு சக்கர வாகனம் சாதனங்கள், Body Worn Camera மற்றும் இதர வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் பணியை தொடங்கி வைத்த சேலம் மாநகர காவல் ஆணையர் அனில் குமார் கிரி அதிரடிப்படையினருக்கு ஆலோசனைகளை வழங்கினார்

பின்னர் மாநகர காவல் ஆணையர் அனில் குமார் கிரி செய்தியாளர்களிடம் பேசுகையில், “பெண்கள் பிரச்சினை தொடர்பாக புகார் செய்தால் அல்லது அவசர அழைப்பிற்கு தொடர்பு கொண்டால் உடனே சிங்கப்பெண் அதிரடி படை அங்கு சென்று தேவையான உதவிகள் மற்றும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்” என்று அவர் கூறினார்.

## ஆன்லைன் மருந்து விற்பனைக்கு எதிர்ப்பு: மே 20ல் நாடு தழுவிய வேலை நிறுத்தம்

### மருந்தக கூட்டமைப்பு அறிவிப்பு

புதுடெல்லி: மே.15–

ஆன்லைன் மருந்து விற்பனையைத் தடை செய்ய கோரி, மே 20ம் தேதி நாடு தழுவிய அளவில் மருந்தகங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றன.

சுமார் 12.4 லட்சம் மருந்தகங்கள் இந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபடக் கூடும் என்பதால் நாடு முழுவதும் மருந்து விநியோகம் பாதிக்கப்படும் என தெரிகிறது.

இது தொடர்பாக அகில இந்திய மருந்தக உரிமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளதாவது: முறைப்படுத்தப்படாத ஆன்லைன் மருந்து விற்பனையால் நோயாளிகளின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. முறையான சரிபார்ப்பு இன்றி மருந்துகள் விநியோகிக்கப்படுவதால், ஒரே மருந்துச் சீட்டைப் பலமுறை பயன்படுத்தும் அவல நிலை காணப்படுகிறது.

ஆன்டிபயாடிக், போதை தரக்கூடிய மருந்துகள் தடையின்றி கிடைப்பதற்கு வழிவகுக்கிறது. செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்ட போலி மருந்துச் சீட்டுகளைப் பயன்படுத்தி மருந்துகள் விற்பனை செய்யப்படுவதால், மருந்து எதிர்ப்புத் திறன் (ஏஎம்ஆர்) அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

மேலும், கரோனா காலத்தில் நடைமுறைப்படுத்தப் பட்ட தற்காலிகத் தளர்வுகளைப் பயன்படுத்தி, ஆன்லைன் நிறுவனங்கள் மருந்து விதிகளை மீறி வருகின்றன. எனவே, மின் மருந்தகச் செயல்பாடுகள் தொடர்பான அரசாணைகளை மத்திய அரசு உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்.

மருந்தகங்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது. இந்தத் தொழிலை நம்பியுள்ள சுமார் 5 கோடி மக்களின் வாழ்வாதாரமும் இதனால் பாதிக்கப்படும். மே 20ம் தேதிக்குள் உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், போராட்டம் தீவிரப்படுத்தப்படும். மே 20 அன்று வேலை நிறுத்தம் நடைபெற்றாலும், அவசர கால மருந்துகள் தடையின்றி கிடைக்கப் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு ஏஐஓசிடி தெரிவித்துள்ளது.

## 10 ஐபிஎஸ் அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவு

சென்னை: மே.15–

10 ஐபிஎஸ் அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவு அளித்துள்ளது. டிஜிபி பாலநாகதேவியை தமிழ்நாடு சைபர் கிரைம் டிஜிபியாக பணியிட மாற்றம் செய்து உத்தரவு. உளவுத்துறை டிஐஜியாக தர்மராஜன் ஐபிஎஸ் , சி.ஐ.டி. உளவுத்துறை டிஐஜியாக ஐபிஎஸ் அதிகாரி சரவணன், கரட் கருண் உத்தவ்ராவ் ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு உளவுத்துறை எஸ்.பி.யாக நியமனம்

## மக்களை ஏமாற்றும் விஜய் அரசின் செயல்பாடு ஏமாற்றம் அளிக்கின்றது: ஜவாஹிருல்லா

சென்னை: மே.15–

பெண்களுக்கு மாதம் ரூ.2,500 வழங்குவோம் என்ற தேர்தல் வாக்குறுதியை காப்பாற்ற தவறி மக்களை ஏமாற்றும் விஜய் அரசின் செயல்பாடு எமாற்றம் அளிக்கின்றது என மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம் எச் ஜவாஹிருல்லா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

தேர்தல் காலத்தில் தமிழக மக்களிடம் பல்வேறு கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை அளித்து ஆட்சிக்கு வந்துள்ள விஜய் அரசு, தற்போது அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் காட்டும் சுணக்கம் ஏமாற்றம் அளிக்க்கின்றது குறிப்பாக, பெண்களுக்கு மாதம் ரூ.2,500 உரிமைத் தொகை வழங்கப்படும் என்று மிகப்பெரிய அளவில் அறிவித்து வாக்குகளை பெற்ற அரசு, ஆட்சிக்கு வந்த பிறகு அது குறித்து எந்த தெளிவான நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது மக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் விலைவாசி உயர்வு, குடும்பச் செலவுகள், கல்விச் செலவுகள், மருத்துவச் செலவுகள் ஆகியவை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், ஏழை மற்றும் நடுத்தர குடும்ப பெண்களுக்கு இந்த உரிமைத் தொகை மிகப்பெரிய நம்பிக்கையாக இருந்தது. தேர்தல் மேடைகளில் “மாதம் ரூ.2,500” என்று உறுதி மொழி அளித்தவர்கள், இன்று அந்த வாக்குறுதியை மறந்து பேசுவது அரசியல் நேர்மையற்ற செயலாகும்.

மாதம் ரூ.2,500 வழங்குவதாக அறிவித்து ஆட்சிக்கு வந்த அரசு, திமுக ஆட்சியில் நடைமுறைப்படுத்தம்மட்ட மக்கள் நலத்திட்டங்கள் தொடரும் என்று சட்டப்பேரவையில் நேற்று உறுதி அளித்து விட்டு மகளிர் மெற்று வந்த மாதம் ரூ.1,000 தொகையைதேர்தல் பகுப்பாய்வு கூட வழங்க மறுப்பது எந்த வகையிலான நிர்வாகம்?

பெண்களின் பொருளாதார முன்னேற்றம், குடும்ப நலன், குழந்தைகளின் கல்வி, அன்றாட வாழ்க்கை ஆகியவற்றோடு நேரடியாக தொடர்புடைய இந்த திட்டத்தில் அரசு அலட்சியம் காட்டக்கூடாது. பெண்களை தேர்தல் கால வாக்குறுதிகளின் மூலம் பயன்படுத்திக்கொண்டு, பின்னர் அவர்களின் நம்பிக்கையை சிதைப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. என அவர் கூறியுள்ளார்.

# ஸ்ரீரங்கம் அரங்கநாதர் கோவில் சித்திரை தேர் திருவிழா ஸ்ரீரங்கம் எம் எல் ஏ தேரை வடம் பிடித்து இழுத்து வைத்தார்





திருச்சி , மே.15–

திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் அரங்கநாதர் கோவில் சித்திரை திருவிழா மிக விமர்சையாக நடைபெற்றது

நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் தமிழக வெற்றிக்கழக வேட்பாளராக தமிழ்நாடு முதலமைச்சர் ச ஜோசப் விஜய் அவர்கள் ஸ்ரீ ரங்கம் வேட்பாளராக எஸ்.ரமேஷ் அவர்களை அறிவிக்கப்பட்டு ஸ்ரீரங்கம் சட்ட மன்ற தொகுதியில் அதிகப்படியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிவாகை சூடிய எம் எல் ஏ எஸ் ரமேஷ் சட்டமன்ற கூட்டத் தொடரில் கலந்து கொண்டு நேற்று இன்று காலை ஸ்ரீரங்கம் தொகுதிக்கு வருகை தந்தார்

ஸ்ரீரங்கம் தொகுதியில் வாக்களித்து வெற்றி செய்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்

ஸ்ரீரங்கம் சித்திரை திருவிழாவை முன்னிட்டு கோவில் நிர்வாகம் சார்பில் எம்எல்ஏ எஸ் ரமேஷ் அவர்களுக்கு அழைப்பு வழங்கியிருந்தனர் அழைப்பின் பேரில் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலுக்குச் சென்ற எம்.எல்.ஏ. எஸ். ரமேஷ் அவர்களுக்கு கோவில் நிர்வாகம் சார்பில் சிறப்பான வரவேற்பு அளித்தனர் பின்னர் சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்வான திருத்தேரை எம் எல் ஏ எஸ் ரமேஷ் வடம் பிடித்து இழுத்து துவக்கி வைத்து தான் சாமி தரிசனம் மேற்கொண்டார்

பின்னர் கோவில் அருகே பொதுமக்களுக்கு நீர் மோர் வழங்கி அங்கு கூடியிருந்த பக்தர்களிடம் ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்த வாக்காளர்களுக்கு நன்றி கூறினார்

# திருவள்ளூர் மாவட்டத்தில் தடையில்லா குடிநீர் விநியோகம் தொடர்பாக துறை அலுவலர்களுடன் காணொளி காட்சி வாயிலாக ஆய்வுக்கூட்டம்



திருவள்ளூர் மே 15 :

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமையில் தடையில்லா குடிநீர் விநியோகம் தொடர்பாக மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய துறை அலுவலர்களுடன் காணொளி காட்சி வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது ஆட்சியர் கூறியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க திருவள்ளூர் மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்குதல் தொடர்பாக ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டது. அனைத்து ஊரக பகுதிகள், பேரூராட்சி பகுதிகள் மற்றும் நகராட்சி பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கும் தினந்தோறும் சீரான குடிநீர் வழங்கப்படுவதை உறுதிபடுத்த வேண்டும், ஆவடி மாநகராட்சி பகுதியில் 2 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வழங்கப்பட வேண்டும்.

மேலும் அனைத்து குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளும் 15 நாட்களுக்கு ஒரு முறை சுத்தம் செய்தும் தினம் தோறும் குளோரினேஷன் செய்யப்பட்ட குடிநீர் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும். மேலும் மோட்டார் பம்பு, பைப்லைன் போன்ற சிறிய பழுதுகள் ஏற்படின் உடனுக்குடன் சரி செய்ய வேண்டும் எனவும் அனைத்து அலுவலர்களுக்கும் உத்தரவிடப் பட்டது. பழுது செய்ய இயலாத குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை இடித்து அப்புறப்படுத்த வும், புதியதாக கட்ட நடவடிக்கை மேற் கொள்ளவும் அறிவுறுத் தப்பட்டது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்களை மீஞ்சூர், பள்ளிப்பட்டு, திருவாலங்காடு மற்றும் பூண்டி ஆகிய பகுதிகளில் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் தங்குதடையின்றி சீரான குடிநீர் வழங்குவதை உறுதி செய்யுமாறும் தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலர்களை சீரான மின் விநியோகம் செய்யவும் அறிவுறுத்தப் பட்டது.

திருவள்ளூர் மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் குடிநீர் தொடர்பான புகார்களை ஆவடி மாநகராட்சி பகுதி மாவட்ட உதவி மைய எண். 04426 554440,பேரூராட்சி பகுதிகளின் மாவட்ட உதவி மைய எண். 044 27665953, ஊரக பகுதிகளின் மாவட்ட உதவி மைய எண். 9445346311 என்ற எண்களில் தெரிவிக்கலாம். அதேபோல் திருவள்ளூர் நகராட்சி 04427665604 / 994252 9151,பூவிருந்தவல்லி நகராட்சி 04426272710 / 782505 0148,திருநின்றவூர் நகராட்சி 04426390663 / 9952724798,பொன்னேரி நகராட்சி 04429561136 / 9751959761, திருவேற்காடு நகராட்சி 04429995805 / 8838118336, திருத்தணி நகராட்சி 04427885258 / 9786038503 ஆகிய தொலைபேசி எண்களை நகராட்சி பகுதிகளுக்கு தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் கூறினார்.

கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரும் இணை இயக்குநருமான வை.ஜெயக்குமார், செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) தணிகாச்சலம், உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள் (ம) தணிக்கை) கே.எஸ்.யுவராஜ் (மத்திய), பஞ்சு (கிழக்கு), ரவிச்சந்திரன் (மேற்கு), உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) ஜெயக்குமார், நகராட்சி ஆணையர்கள். வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ/கி.ஊ), மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி செயலாளர்கள் மற்றும் மின்வாரிய துறை கண்காணிப்பு பொறியாளர் மற்றும் பல்துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இந்து முன்னணி கட்சி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் செய்தியாளர் சந்திப்பு



கோவை மே:15

கோவை ராம்நகர் பகுதியில் உள்ள இந்து முன்னணி அலுவலகத்தில் அக்கட்சியின் மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் செய்தியாளர்களைச் சந்தித்தார்.அப்போது பேசிய அவர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினுக்கு அவர் கடும் கண்டனத்தை தெரிவிப்பதாகவும் சனாதனத்திற்கு எதிராக உதயநிதி ஸ்டாலின் பேசி வருவதாக குறிப்பிட்டார். உதயநிதி ஸ்டாலின் தொடர்ந்து இந்துக்களுக்கு எதிராகச் சிறுபிள்ளைத்தனமாகப் பேசி வருவதாகவும், ஏற்கனவே ஜாமீனில் இருக்கும் அவர் இத்தகைய கருத்துகளால் இந்துக்களின் வாக்குகளை இழந்து வருவதாகவும் கூறினார். உதயநிதி ஸ்டாலினின் இந்தப் பேச்சைக் கண்டித்து வரும் 17ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அறிவித்தார். புதிய முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள ஜோசப் விஜய்க்கு வாழ்த்துகளைத் தெரிவித்து கொண்ட காடேஸ்வரா சுப்பிரமணியம், மத பாகுபாடு இல்லாமல் அரசு செயல்படும் என்ற அவரது உறுதிமொழியை வரவேற்றபதாகவும் டாஸ்மாக் கடைகளைக் குறைக்க விஜய் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்குப் பாராட்டுத் தெரிவித்து கொள்வதாகவும் கூறினார்.

முந்தைய அரசு இந்து பண்டிகைகளுக்கு வாழ்த்து தெரிவிக்காத நிலையைச் சுட்டிக்காட்டிய அவர், கடவுள் நம்பிக்கை கொண்டவரான விஜய்,அனைத்து இந்து பண்டிகைகளுக்கும் பாகுபாடின்றி வாழ்த்து தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சபாநாயகர் தனது உரையில் பைபிள் வாசகங்களை மட்டும் கூறாமல், பகவத் கீதை மற்றும் குர் ஆன் வாசகங்களையும் குறிப்பிட்டிருப்பதைச் சுட்டிக்காட்டிய,அதுவே சரியான அணுகுமுறை தான் என்றார்.விஜய்யின் ஆட்சி குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர்,ஆறு மாத காலத்திற்குப் பிறகுதான் ஆட்சியின் முழுமையான செயல்பாடுகள் தெரியவரும் என்றார்.

தனது ஜோதிடரை அரசு பதவியில் நியமித்த முடிவை விஜய் திரும்பப் பெற்றிருக்கத் தேவையில்லை எனக் குறிப்பிட்ட அவர்,விசிக மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவை நம்பினால் ஓராண்டு கூட ஆட்சி நிலைக்காது என்றார்.மேலும், மக்கள் மாற்றத்தை விரும்பி விஜய்க்கு வாக்களித்துள்ளார்கள் அவரது கட்சியினர் பணம் கொடுக்காமல் வெற்றி பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

இறுதியாக அண்ணாமலை மீண்டும் பாஜக தலைவராவோ அல்லது மத்திய அமைச்சராகவோ வர வாய்ப்பு ள்ளதாகவும் ,தமிழகத்தில் பாஜக இன்னும் தீவிரமாகக் களப்பணியாற்ற வேண்டும் என்று தெரிவித்தார்.

# வந்தவாசியில் கலை பண்பாட்டுத் துறையின் கோடைக்கால கலைப் பயிற்சி முகாம் நிறைவு விழா..!



வந்தவாசி, மே 15:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழக அரசின் கலை பண்பாட்டு துறையின் ஜவகர் சிறுவர் மன்ற அமைப்பின் சார்பில் நடைபெற்ற மாணவர்களுக்கான கோடைகால கலைப்பயிற்சி முகாம் நிறைவிழா நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியர் ப.ஞானசம்பந்தன் தலைமை தாங்கினார். திட்ட அலுவலர் பெ.பார்த்திபன் வரவேற்றார். தலைமை ஆசிரியர்கள் க.வாசு, டி.ஆர்.நம் பெருமாள், வழக்கறிஞர் சா.இரா.மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன், பட்டதாரி ஆசிரியர் கோபிநாத், ஆசிரியை கண்மணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாணவர்கள் வரைந்த ஓவியங்கள் கண்காட்சியாக படைக்கப்பட்டது. மேலும் சிலம்பம் சுழற்றல், கீபோர்டு வாசித்தல் உள்ளிட்ட பல்வேறு திறன் சார்ந்த பயிற்சிகளை மாண வர்கள் மேற்கொண்டனர். நிகழ்வில் பயிற்சி முகாமில் பங்கேற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் கீபோர்டு கலைஞர் ஜேம்ஸ், சிலம்பம் மாஸ்டர் பெ.பெரியசாமி ஆகியோர் பங்கேற்றனர். நிகழ்வை கேப்டன் பிரபாகரன் தொகுத்து வழங்கினார். இதில் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் ஏராளமானோர் பங்கேற்றனர். இறுதியில் ஓவிய ஆசிரியர் ரமேஷ் நன்றி கூறினார்.

# பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்கள் வரும் 18ம் தேதி முதல் மேல்நிலை துணைத் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்

சென்னை: மே.15–

11ம் வகுப்பு மற்றும் +2 பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்கள் வரும் 18ம் தேதி முதல் 30ம் தேதி வரை மேல்நிலை துணைத் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம் என்று அரசு தேர்வுகள் இயக்ககம் அறிவித்துள்ளது. மாணவர்கள் தங்கள் பயின்ற பள்ளி வாயிலாகவும், தனித்தேர்வர்கள் மாவட்ட வாரியான சேவை மையங்கள் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம். ஆன்லைன் பதிவுகட்டணம் மற்றும் தேர்வுக்கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்கலாம்

# திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் தடை செய்யப்பட்ட லாட்டரி விற்ற மூவர் கைது!

திருவாரூர்: மே.15

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் சட்ட விரோதமாக லாட்டரி விற்பனை செய்யப்படுவதாக காவல் துறையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் சோதனை மேற்கொண்ட போது மூன்று பேர் லாட்டரி விற்பனை செய்தது தெரியவந்துள்ளது எனவே அவர்களை போலீசார் கைது செய்தனர். இந்நிலையில் அவர்களிடமிருந்து 2 லட்சத்து 43 ஆயிரத்து 700 ரூபாய் ரொக்க பணமும் 160 லாட்டரி சீட்டுகளை காவல்துறை பறிமுதல் செய்தனர்.

திருத்துறைப்பூண்டி பழைய பேருந்து நிலையம் அருகே சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்த மூன்று பேரை திருவாரூர் சிறப்பு எஸ்.ஐ. கார்த்தி தலைமையிலான போலீசார் விசாரணை நடத்தினர். விசரணையில் கிடைத்த தகவலின் பேரில் சேகர் என்பவற்றின் வீட்டில் போலீசார் சோதனை மேற்கொண்டனர். அப்போது அங்கு சட்டவிரோதமான லாட்டரி சீட்டுகள் மற்றும் பணம் பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

மேலும் இந்த வழக்கில் தொடர்புடைய நாகப்பட்டினம் மாவட்டத்தை சேர்ந்த சுபாஷ்சந்திரபோஸ், கலியபெருமாள், சத்தியசாமி மற்றும் பண்ணீர் செல்வன் ஆகியோர் பிடிபட்டனர். அவர்களிடம் இருந்து 4 செல்போன்கள், 3 ஏடிஎம் கார்டுகள் மற்றும் 10 வங்கி பாஸ்புக்குகளையும் போலீசார் பறிமுதல் செய்தனர்.

# மாற்றுத்திறனாளிகள் குறித்து அவதூறு பேச்சு தவெக அமைச்சர் கீர்த்தனா மன்னிப்பு கோரினார்

சென்னை. மே. 15–

மாற்றுத்திறனாளிகள் குறித்து சர்ச்சையான கருத்து தெரிவித்ததாக எழுந்த கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து தவெக அமைச்சர் கீர்த்தனா மன்னிப்பு கோரியுள்ளார். என்னுடைய வார்த்தைகள் யாருடைய மனதையும் புண்படுத்தியிருந்தால் மனமார்ந்த வருத்தத்தையும், மன்னிப்பையும் தெரிவித்துக்கொள்கிறேன் என்று அவர் விளக்கம் அளித்துள்ளார்.

ஆனால், இந்த மன்னிப்பு பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் அமைப்புகளின் கோபத்தை தணிக்க போதுமானதா என்ற கேள்வி எழுந்துள்ளது. அறியாமல் செய்த தவறு என்று அமைச்சர் கூறினாலும், பதவியில் இருப்பவர்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் சமூகத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் அதிக பொறுப்புணர்வு தேவை என விமர்சகர்கள் குற்றம்சாட்டுகின்றனர். மாற்றுத்திறனாளிகள் சமூகத்தின் உணர்வுகளை உண்மையாக புரிந்துகொண்டு அமைச்சர் கீர்த்தனா செயல்பட வேண்டும் என சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# ரூ.13,000 லஞ்சம் பெற்ற இருவர் கைது.

சேலம். மே. 15–

சேலம் மாவட்டம்,மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மணிமேகலை என்னும் பெண்ணிடம் கட்டிடம் கட்ட அனுமதி வழங்க ரூ.13,000 லஞ்சம் பெற்ற மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கார்த்திக் தனியார் இன்ஜினியர் தீபக் ஆகியோரை சேலம் ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் தக்க சமயத்தில் பிடித்து கைது செய்தனர்.

# காங்கிரஸ் பேரியக்கத்தில் இணைத்துக் கொண்ட திமுக நிர்வாகி!!



திருப்பூர்:மே15

கருவம்பாளையம் காங்கிரஸ் திருப்பூர் மாநகர மாவட்ட தலைவர் பி.கோபால்சாமி அவர்களின் வழிகாட்டுதலில் 43வது வார்டு தலைவி .எஸ்.பிரேமலதா B.com அவரது அறிவுறுத்தல் படி எஸ்.சாதிக்பாட்சா அவர்களின் தலைமையில் காங்கிரஸ் கட்சியில் திமுக நிர்வாகி T.நாச்சிமுத்து 43வார்டு பகுதியில் கடந்த 25 ஆண்டுகளாக திராவிட முன்னேற்ற கழகத்தில் பயணித்தவர் கட்சியிலிருந்து விலகி காங்கிரஸ் பேரியக்கத்தில் இணைத்துக் கொண்டார். அவருக்கு வார்டு நிர்வாகிகள் பொன்னாடை அணிவித்து வரவேற்றனர்,வார்டு துணை தலைவர் அபுதாகீர்.மற்றும் தோழர்கள் எஸ்.சேதுபதி மகளிர் அணி நிர்வாகிகளும் வாழ்த்து தெரிவித்தனர்...



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் 2025–2026 கல்வியாண்டின் 12ஆம் வகுப்பு தேர்ச்சி விகிதம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் அரசு பள்ளி தலைமையிலாசிரியர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. உடன் முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன், துணை ஆட்சியர் கதிர் செல்வி, ஊரக வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் செல்வி இளவரசி உட்பட பலர் உள்ளனர்.

## +2 நேரடி தனித் தேர்வு:

## தமிழில் 98 மதிப்பெண்கள் பெற்ற மாணவிக்கு பாராட்டு..!



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையத்தில் சிறப்பு பயிற்சி பெற்று நடைபெற்ற அரசு பொதுத் தேர்வில் +2 நேரடி தனித்தேர்வு எழுதி 449 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி அடைந்தார். மேலும் அவர் தமிழில் 98 மதிப்பெண்கள் பெற்று வந்தவாசி பகுதியில் சிறப்பிடம் பெற்றமைக்கு தனித் தேர்வு மாணவி பி.சித்ராவுக்கு பாராட்டு விழா ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன், முதுகலை தமிழாசிரியர் பூங்காவனம், முதுகலை ஆசிரியர் பூபாலன், ஆசிரியர் மகாவீர் உள்ளிட்ட மாணவ மாணவிகள் பலரும் பங்கேற்றனர்.



தமிழ்நாடு காவல்துறையில் 2011 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த காவலர்கள் இணைந்து உருவாக்கியுள்ள "2011 பேட்ச் காக்கி உதவும் கரங்கள்" அமைப்பின் மூலம், தங்களது பேட்சில் பணியாற்றியபோது உயிரிழந்த காவலர்களின் குடும்பங்களுக்கு தொடர்ந்து நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், கடந்த 27.08.2025 அன்று நாமக்கல் காவல் நிலையத்தில் பணியாற்றி வந்த தலைமை காவலர் 1124 திரு. செளந்தர்ராஜன் அவர்கள் பணிக்கு புறப்படும் வேளையில் திடீர் மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்தார்.

அவரை இழந்து துயரத்தில் வாடும் அவரது குடும்பத்தினருக்கு உதவிடும் நோக்கில், "2011 பேட்ச் காக்கி உதவும் கரங்கள்" அமைப்பின் மூலம் திரட்டப்பட்ட ரூபாய் 25,91,500/ (ரூபாய் இருபத்தைந்து லட்சத்து தொண்ணூற்று ஒன்று ஆயிரத்து ஐந்நூறு மட்டும்) நிதியுதவி, நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி S. விமலா, இ.கா.ப., அவர்கள் மூலம் அவரது குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டது.

மேலும், இதுவரை இவ்வமைப்பின் மூலம் உயிரிழந்த 52 காவலர்களின் குடும்பங்களுக்கு மொத்தமாக ரூபாய் 10,23,75,737/ (ரூபாய் பத்து கோடியே இருபத்து மூன்று லட்சத்து எழுபத்தைந்து ஆயிரத்து எழுநூற்று முப்பத்தேழு மட்டும்) நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இத்தகைய மனிதநேயச் செயலை நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வெகுவாக பாராட்டினார்.

# விழுப்புரம் மாவட்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில் துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

விழுப்புரம். மே. 15–

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், விழுப்புரம் மாவட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் பொதுமக்களின் நலனுக்காக அரசின் பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில், இன்றைய தினம் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்ந்த அலுவலர்களுடன்



ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொதுமக்கள் இசேவை மூலமாக விண்ணப்பம் செய்துள்ள சாதிச் சான்றிதழ், உண்மைத் தன்மை சரிபார்ப்பு, சமூக பாதுகாப்புத் திட்டங்கள், பொது விநியோகத் திட்டப் பணிகள், பட்டா மாற்றம், பட்டா மாற்றம் மேல் முறையீடு, இணைய வழி சான்றுகள் உள்ளிட்ட வருவாய்த்துறை தொடர்பான பல்வேறு இனங்கள் குறித்து சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் விரிவாகக் கேட்டறிந்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் பொதுமக்கள் இணையவழி சான்றிதழ்களை பெற விண்ணப்பங்களின் விவரங்கள் குறித்தும், பட்டா மாற்றத்திற்கு விண்ணப்பங்களின் விவரங்கள் குறித்தும் கேட்டறியப்பட்டது. வருவாய்த்துறை சம்மந்தமாக பொதுமக்கள் இசேவை மூலமாக விண்ணப்பம் செய்துள்ள சாதிச் சான்றிதழ், உண்மைத் தன்மை சரிபார்ப்பு, சமூக பாதுகாப்புத் திட்டங்கள், பொது விநியோகத் திட்டப் பணிகள், பட்டா மாற்றம், பட்டா மாற்றம் மேல் முறையீடு, இணைய வழி சான்றுகள் போன்றவைகள் நிலுவையில் உள்ள விண்ணப்பங்களை உரிய விசாரணை மேற்கொண்டு சான்றிதழ்கள் வழங்க நடவடிக்கை எழுக்க வேண்டும்.

இதுமட்டுமல்லாமல், பொதுமக்களுக்கு வருவாய்த் துறையின் சார்பில் வழங்கப்படும் பல்வேறு சேவைகளை அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு உடனுக்குடன் வழங்கவும், மேலும் அரசின் சேவைகள் அனைத்து பொதுமக்களிடம் முறையாக சென்று சேர்வதை உறுதி செய்யும் வகையில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கி.அரிதாஸ், விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.முருகேசன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## தமிழக அமைச்சராகப் பொறுப்பேற்ற புஸ்ஸி ஆனந்த் அவர்களுக்கு புதுச்சேரி தொழிலதிபர் ஆர். சுரேஷ் வாழ்த்து!



புதுச்சேரி: மே.15–

தமிழக அமைச்சரவையில் புதிய அமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்ட புதுச்சேரியைச் சேர்ந்த புஸ்ஸி ஆனந்த் அவர்களை, புதுச்சேரி பழனியாண்டவர் குரூப்ஸ் பிராபர்ட்டி டெவலப்பர்ஸ் (Palaniandavar Groups Property Developers) உரிமையாளர் ஆர். சுரேஷ் அவர்கள் நேரில் சந்தித்து தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

சந்திப்பின் சிறப்பம்சங்கள்:

தமிழக அமைச்சராகப் பதவியேற்ற பிறகு புதுச்சேரி திரும்பிய அமைச்சருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின் போது, தொழிலதிபர் ஆர். சுரேஷ் அவர்கள் அமைச்சருக்கு பொன்னாடை (சால்வை) அணிவித்து, மலர்க்கொத்து வழங்கி தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்.

புதுச்சேரியைச் சேர்ந்த ஒருவர் தமிழக அமைச்சரவையில் முக்கிய இடத்தைப் பிடித்திருப்பது பெருமிதம் அளிப்பதாக இந்தச் சந்திப்பின் போது நெகிழ்ச்சியுடன் பேசப்பட்டது.

இந்த நிகழ்வின் போது பழனியாண்டவர் குரூப்ஸ் நிறுவனத்தின் முக்கியப் பிரதிநிதிகள் மற்றும் அமைச்சரின் ஆதரவாளர்கள் உடனிருந்தனர். அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள புஸ்ஸி ஆனந்த் அவர்களுக்கு பல்வேறு தரப்பிலிருந்தும் பாராட்டுகள் குவிந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## ஈரோடு மாவட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி, தலைமையில் குடிநீர் திட்டப்பணிகள், திடக்கழிவு மேலாண்மை, திட்டப்பணிகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.




ஈரோடு, மே. 15–

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று (14.05.2026) மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி தலைமையில் மாநகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாகம் சார்பில் குடிநீர் திட்டப் பணிகள், திடக்கழிவு மேலாண்மை, திட்டப் பணிகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கோடை காலத்தில் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்வது, குடிநீர் திட்டத்தின் கீழ் விநியோகம் செய்யப் படும் குடிநீர் அளவு. மற்றும் நிலுவையில் உள்ள குடிநீர் திட்டப் பணி களை விரைந்து முடிப்பது குறித்து ஆலோசனை மேற்கொண்டார். மேலும், மாநகராட்சி. நகராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளின் தற்பொழுது நிலை குறித்தும் கேட்டறிந்து, பணிகளை குறித்த காலத்திற்குள் முடிந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு அலுவலர்களுக்கு உத்தர விட்டார்.

திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் குறித்து கேட்டறிந்து சாலையோரமாக உள்ள குப்பைகளை விரைந்து அகற்றும்படி அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில் ஈரோடு மாநகராட்சி ஆணையர் திரு.அர்பித் ஜெயின் இ.ஆ.ப., நகராட்சி ஆணையாளர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 21 வயதிற்கு கீழ் உள்ளவர்களுக்கு மதுபானங்கள் விற்பனை செய்யக் கூடாது டாஸ்மாக் நிர்வாகம்

21 வயது பூர்த்தி அடையாதவர்களுக்கு மதுபானம் விற்பனை செய்யக் கூடாது என டாஸ்மாக் நிர்வாகம் தெரிவித்துள்ளது. மது வாங்க வருவோரின் வயதில் சந்தேகம் ஏற்பட்டால் உரிய ஆவணங்களை சரிபார்த்து விற்பனை செய்ய வேண்டும். வயதில் சந்தேகம் ஏற்பட்டால் ஆதார், ஒட்டுநர் உரிமம் போன்ற ஆவணத்தை சரிபார்த்து மது விற்க வேண்டும். 21 வயதுக்கு கீழே உள்ளவர்களுக்கு மதுபானம் விற்பனை செய்தால் துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## தமிழ்நாடு தேர்தலில் வாக்களித்த வெளிநாட்டு குடியுரிமை பெற்றவர்கள் அதிரடி கைது!

சென்னை: மே.15–

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் வெளிநாட்டு குடியுரிமைப் பெற்றவர்கள் சட்டவிரோதமாக வாக்களித்தது கண்டுபுடிக்கப்பட்டது. தேர்தல் வாக்குப்பதிவு முடிவடைந்த நிலையில், சொந்த நாட்டுக்கு திரும்ப சென்னை விமான நிலையத்திற்கு வந்தபோது கையில் மை இருந்ததை வைத்து கண்டுபிடித்த குடியேற்றத்துறை அதிகாரிகள் அவர்களை பரிசோதித்தபோது சட்டவிரோதமாக சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களித்தது தெரிய வந்துள்ளது.

கனடா குடியுரிமை பெற்ற ஜிதேந்திரநாத், ஆஸ்திரேலிய குடியுரிமை பெற்ற சந்திரசேகர ரகுபதி, இலங்கையை சேர்ந்த ஒருவர் என 3 பேரை விமான நிலைய அதிகாரிகள் பிடித்து போலீசாரிடம் ஒப்படைத்தனர். வெளிநாட்டு குடியுரிமை பெற்றிருந்த போதிலும், தங்களுடைய பழைய இந்திய வாக்காளர் அடையாள அட்டையை ரத்து செய்யாமல், அதனைப் பயன்படுத்தி இந்த மூன்று பேரும் வாக்களித்தது விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்திய சட்டப்படி, ஒருவர் வெளிநாட்டு குடியுரிமை பெறும்போது, அவரது இந்தியக் குடியுரிமை தானாகவே ரத்தாகிவிடும். இதன் விளைவாக, இந்தியாவில் வாக்களிக்கும் உரிமையையும் அவர் இழந்துவிடுகிறார். இந்தியக் குடியுரிமையைத் துறந்த பிறகு தேர்தலில் வாக்களிப்பது சட்டப்படி குற்றமாகும்.

## சேலத்தில் பரபரப்பு : கோவில் சிலையில் கைவரிசை அம்மன் நகையைத் திருடிய 2 பேர் அதிரடி கைது.

சேலம். மே.15–

சேலம் மாவட்டம் உத்தமசோழபுரம் பகுதியில் அமைந்துள்ள அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலில் பூசாரியாக பணியாற்றி வருபவர் பூலாவரி வாணியர் தெருவைச் சேர்ந்த சுப்பிரமணி(65) இந்தச் சம்பவத்தன்று வழக்கம்போல் அதிகாலை நேரத்தில் கோவிலுக்கு வந்த அவர், அம்மனுக்கு சிறப்பு பூஜை மற்றும் அபிஷேக பணிகளில் ஈடுபட்டிருந்த தாகதெரிவிக்கப்படுகிறது.

அப்போது கோவில் வளாகத்தில் அடையாளம் தெரியாத ஒருவர் சந்தேகத்திற்கிடமாக சுற்றித்திரிந்ததாக தெரிவிக் கப்படுகிறது. அம்மனுக்கு அபிஷேகம் செய்வதற்காக பூசாரி தண்ணீர் எடுக்கச் சென்ற நேரத்தை பயன்படுத்திக் கொண்ட அந்த நபர், நேராக கருவறைக்குள் நுழைந்ததாக தெரிவிக்கப் படுகிறது. இதனால் சந்தேகமடைந்த பூசாரி உடனடியாக கருவறைக் குள் சென்று பார்த்த போது, அம்மன் கழுத்தில் அணிவிக்கப்பட்டிருந்த சுமார் 2 பவுன் தங்க சங்கிலி மாயமானது தெரியவந்தது.

மேலும், நகையை அபகரித்த நபர் கோவிலுக்கு வெளியே இருசக்கர வாகனத்துடன் காத்திருந்த மற்றொருவருடன் தப்பிச்சென்றதும் பின்னர் தெரியவந்தது.

இந்த துணிகர திருட்டுச் சம்பவம் குறித்து சுப்பிரமணி கொண்டலாம்பட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில் காவலர்கள் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணையில் ஈடுபட்டனர்.

இந்த விசாரணையில், ஓமலூர் பூமிநாயக்கன் பட்டியைச் சேர்ந்த லட்சுமணன் (42), ராமன் (42) ஆகியோர் இணைந்து அம்மன் நகையை திருடியிருப்பது தெரியவந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்து இருவரையும் கைது செய்த காவலர்கள், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## டாஸ்மாக் கடைகளில் பாட்டிலுக்கு 10 ரூபாய் கூடுதல் விலைக்கு விற்பனை செய்தால் ஒழுங்கு நடவடிக்கை என தமிழக அரசு உத்தரவால் ஊழியர்கள் மகிழ்ச்சி :

திருவள்ளூர் மே 15 :

கடந்த திமுக ஆட்சியின் போது டாஸ்மாக் கடைகளில் விற்கப்படும் ஒவ்வொரு பாட்டிலுக்கும் கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்பட்டது. மேலும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் டாஸ்மாக் சார்பில் காலி மதுபான பாட்டில்களை திரும்ப பெறும் திட்டத்தை நீதிமன்ற உத்தரவின் பேரில் நடை முறைப்படுத்தப்படும் என திமுக அரசால் அறிவிக்கப்பட்டது.

இந்த திட்டத்தை அமல்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து டாஸ்மாக் தொழிற் சங்கங்கள் இணைந்து பல்வேறு மாவட்டங்களில் டாஸ்மாக் ஊழியர்கள் போராட்டத் தில் ஈடுபட்டனர். பாட்டில்கள் மேல் ஸ்டிக்கர் ஒட்ட மாட்டோம் என்றும், எச்சில் காலி பாட்டில் வாங்க மாட்டோம் என்றும் தெரிவித்தனர். ஆனால் திமுக அரசின் எச்சரிக்கையால் ஊழியர் கள் அதிர்ச்சடைந்தனர். இதனையடுத்து டாஸ்மாக் கடையில் காலி மது பாட்டில்களை வைக்க இடம் இல்லாததால் கடைக்கு அருகிலேயே ஷெட் அமைத்து அதற்காக டாஸ்மாக் பணியாளர் களே ஒருவரை நியமித்து, காலி மது பாட்டில்களை வாங்கி வந்தனர்.

ஆனால் டாஸ்மாக் நிர்வாகம் சார்பில் இதற்கான கூடுதல் செலவை ஏற்காத நிலையில் டாஸ்மாக் ஊழியர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வந்தனர். தற்போது தவெக தலைமையில் புதிய ஆட்சி அமைந்ததும் பல்வேறு அதிரடி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக டாஸ்மாக் கடைகளில் மது பாட்டில்களுக்கு கூடுதல் விலைக்கு விற்பனை செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக அரசின் உத்தரவின் பேரில் டாஸ்மாக் நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில் டாஸ் மாக் ஊழியர்களுக்கு ஊதியத்தை உயர்த்தி வழங்க வேண்டும் என்றும், கடைக்கான வாடகை, மின் கட்டணம் ஆகியவற்றை முழுவது மாக அரசே செலுத்த வேண்டும் என்றும், அரசின் கவனத்திற்கு இது கொண்டு செல்லப்பட வேண்டும் என்றும் டாஸ்மாக் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## நீட் தேர்வை ரத்து செய்க: ஒன்றிய அரசுக்கு முதல்வர் வலியுறுத்தல்



சென்னை: மே.15–
முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கை: தேசிய தேர்வு முகமை மூலம் தேசிய தகுதி மற்றும் நுழைவு தேர்வு (நீட்யுஜி 2026), கடந்த மே மாதம் 3ம் தேதி 5,432 தேர்வு மையங்களில் நடத்தப்பட்டது. 1.4 லட்சம் தமிழக மாணவ, மாணவியர் உள்பட 22 லட்சத்து 5 ஆயிரத்து 35 மாணவ மாணவியர் இத்தேர்வில் பங்கேற்றனர். வினாத்தாள் கசிந்ததாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக சட்ட அமலாக்க அமைப்புகள் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், இந்திய அரசின் ஒப்புதலுடன், தேசிய தேர்வு முகமை தற்போது நடந்து முடிந்த நீட்தேர்வை ரத்து செய்துள்ளது.

மேலும்,இவ்விவகாரம் விசாரணைக்காக மத்திய புலனாய்வு அமைப்பான சிபிஐக்கு மாற்றப்பட்டுள்ளது. இந்த ரத்து நடவடிக்கை, நாடு முழுவதும் உள்ள லட்சக்கணக்கான மருத்துவ படிப்பு மாணவ மாணவியரின் நம்பிக்கையை சிதைத்துள்ளது. நீட் தேர்வின் நம்பகத்தன்மை பாதிக்கப்படுவது இது முதல் முறையல்ல. கடந்த 2024ம் ஆண்டிலும் வினாத்தாள் கசிவு ஏற்பட்டது.

உச்சநீதிமன்றத்தின் அறிவுறுத்தலின்பேரில், முன்னாள் இஸ்ரோ தலைவர் டாக்டர் கே. ராதாகிருஷ்ணன் தலைமையில் உயர்மட்ட நிபுணர் குழுவின் சீர்திருத்த பரிந்துரைகளை மீறி, இரண்டே ஆண்டுகளில் மீண்டும் ஒரு வினாத்தாள் கசிவு நிகழ்ந்துள்ளதோடு, நீட்தேர்வும் முழுமையாக ரத்து செய்யப்பட்டுள்ளது. தேசிய அளவிலான ஒரு தேர்வில் உள்ள குறைபாடுகளுக்கும், கட்டமைப்பு ரீதியான குறைபாடுகளுக்கும் இதுவே உறுதியான சான்றாகும்.

நீட் தேர்வு அறிமுகப் படுத்தப்பட்ட காலத்திலிருந்தே, தமிழ்நாடு அரசு அதனைத் தொடர்ந்து மற்றும் ஒருமித்த குரலில் எதிர்த்து வருகிறது. நீட் தேர்வு அறிமுகப் படுத்தப்பட்டதன் விளைவாக, கிராமப்புறங்கள், அரசுப் பள்ளிகள், தமிழ் வழிப் பயிற்று மொழிப் பின்னணிகள் மற்றும் சமூக, பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, தமிழ்நாடு அரசின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ள நீட் தேர்வை முழுமையாக ரத்து செய்யவும், எம்பிபிஎஸ், பிடிஎஸ் மற்றும் ஆயுஷ் படிப்புகளில் மாநில ஒதுக்கீட்டின் கீழ் உள்ள அனைத்து இடங்களையும் 12ம் வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் மாநிலங்களே நிரப்ப அனுமதிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்துகிறேன்.

## "தேர்தல் தோல்விக்கு நானே பொறுப்பேற்றுக் கொள்கிறேன்": திமுக தலைவர் மு.க.ஸ்டாலின்




சென்னை: மே.15–
"இந்த தேர்தலில் நடந்திருப்பது புதுவிதமான கவர்ச்சி மாயாஜால சுனாமி. சுனாமி என்றால் சாகசமோ, சாதனையோ கிடையாது. பெரும் பாதிப்பு என்ற அர்த்தத்தில் சொல்கிறேன். தமிழக நலன்களைப் பாதித்திருக்கும் சுனாமி பேரழிவு இது" என திமுக தலைவர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். மேலும், "கட்சியின் தலைவர் என்ற முறையில், நானே இந்தத் தோல்விக்கு பொறுப்பேற்றுக் கொள்கிறேன்" என்று அவர் கூறினார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் இன்று நடைபெற்ற திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் திமுக தலைவர் ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது பேசிய அவர், "நடந்து முடிந்த தேர்தலில் எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைக்கும் அளவுக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை. இப்போது அமைந்திருக்கும் அரசும், கூட்டணிக் கட்சிகளின் தயவால்தான் ஆட்சியை அமைத்திருக்கிறது. நமது கூட்டணியுடன் சேர்ந்து வெற்றி பெற்றவர்களின் ஆதரவோடு தான் ஆட்சி அமைந்திருக்கிறது.

நமக்கு பெரும்பான்மை கிடைக்வில்லையே தவிர, கணிசமான எண்ணிக்கையில் வாக்குகள் கிடைத்திருக்கிறது. பொது வாழ்க்கைக்கு வந்தால் வெற்றி தோல்வி சகஜம். ஏற்ற இறக்கங்கள் இருக்கும். அதுதான் அரசியல். இந்தப் பக்குவம் வேற யாரையும் விட நமக்குத்தான் அதிகம். இதுதான், அண்ணா மற்றும் கருணாநிதி நமக்கு கற்றுக் கொடுத்தப் பக்குவம்.

கட்சியின் தலைவர் என்ற முறையில், நானே இந்தத் தோல்விக்கு பொறுப்பேற்றுக் கொள்கிறேன். இதுதான் நிதர்சனம். தோல்வியின்போது ஆதங்கத்தை கொட்டுவது இயல்பானதுதான். ஆனால் அது பழியாக இருக்கக் கூடாது. ஆய்வு செய்வது அவசியம்தான் ஆனால் அடுத்தவர் மீதான அவதூறாக இருக்கக் கூடாது.

இந்த தேர்தலில் நடந்திருப்பது புதுவிதமான கவர்ச்சி மாயாஜால சுனாமி. சுனாமி என்றால் சாகசமோ, சாதனையோ கிடையாது. பெரும் பாதிப்பு என்ற அர்த்தத்தில் சொல்றேன். தமிழ்நாட்டின் நலன்களை பாதித்திருக்கும் சுனாமி பேரழிவு இது. தமிழ்நாட்டு மக்களை இதில் இருந்து, எப்படி மீட்டெடுக்கப் போகிறோம் என்பதைப் பற்றி யோசியுங்கள். எங்கு கோளாறு நடந்தது? எங்க மெத்தனம் ஏற்பட்டிருக்கிறது? என்பதுதான் முக்கியம். இதை ஆய்வு செய்ய வேண்டும். ஒவ்வொரு தொகுதிக்கும் தனிப்பட்ட பல பிரச்சினைகள் இருக்கிறது. இவைகளைப் பரிசிலீத்து, ஆய்வு செய்ய வேண்டும்.

இது ஒரு தேர்தல் சுழல்தானே தவிர, நாம் மீண்டெழ முடியாத தோல்வி அல்ல. இனி கவனத்துடன், ஒற்றுமையாக செயல்பட வேண்டும். அதற்கு முன்னர் நாம் நம்மை, சுய பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். தோல்விக்கான காரணங்கள் குறித்து, தொகுதிவாரியாக, நமது அனைத்து மட்ட நிர்வாகிகளிடமும் கருத்து கேட்க வேண்டும். அதற்காக தலைமை சார்பில் கள ஆய்வு நடத்தி அறிக்கை தர ஒரு குழுவை அமைக்கப் போகிறேன். அவர்கள் தமிழ்நாடு முழுவதும், தொகுதி வாரியாக, எல்லா தரப்பு நிர்வாகிகளையும் சந்தித்து பேசி அடுத்த 20 நாட்களுக்குள் எனக்கு அறிக்கை தருவார்கள்.

தொண்டர்கள் வெளிப்படையாக தகவல் கூற தனி 'வெப்சைட்' நாளையே அறிவிக்கப்படும். தலைமைக் கழகத்தால அமைக்கப்படும் விசாரணைக் குழு, வெப்சைட் மூலமாக கட்சியின் தொண்டர்கள் மற்றும் நம் மேல் அக்கறை கொண்ட பொதுமக்கள் சொல்லும் ஆலோசனைகளையும் வைத்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்பு முறையில் மிகப்பெரிய மாற்றத்த கொண்டு வர இருக்கேன். அந்த மாற்றம்தான், நம் கழகத்தை இன்னும் ஒரு நூறாண்டுக்கு உயிர்ப்புடன் வைத்திருக்க போகிறது.

இந்த தேர்தல் முடிவுகளுக்கு பிறகு, மாநாடுகள் பொதுக் கூட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் இதையெல்லாம் தாண்டிய களமாக சமூக வலைத்தளங்கள் உருவெடுத்திருக்கிறது. இதை நான் கடந்த ஐந்தாண்டுகளில் பல முறை வலியுறுத்தியுள்ளேன். சட்டமன்றத்தில் முறையான திறமையான கட்சியாக நாம் செயல்பட வேண்டும். நமது அரசியல் எப்படி இருக்க வேண்டுமென்றால், கடந்த ஐந்தாண்டுகளில் நாம் உருவாக்கிய திட்டங்களை தொடர்ந்து செயல்பட வைக்க வேண்டும்.

அனைத்து நிர்வாகிகளிடமும் நான் வலியுறுத்தி பேசுவது, நிர்வாகிகள் ஒற்றுமைதான். கோஷ்டி அரசியலை விட்டுட்டு, எல்லாரையும் அரவணைத்துப் போகவேண்டும். நமக்குள்ளேயே ஒற்றுமை இல்லையென்றால், வெற்றி என்பது சாத்தியம் இல்லை.

மாவட்டச் செயலாளர்கள் தான் மாவட்டத்துக்கு முக்கியம். அதை நான் மறுக்கவில்லை. அதற்காக மாவட்டச் செயலாளர்கள் மட்டுமே முக்கியம் என ஆகிவிடக் கூடாது. எல்லாருமே முக்கியம்தான். ஒருவேளை யாராவது, "என்னால செயல்பட முடியாது" என நினைத்தால், மனப்பூர்வமாக முன் வந்து விலகிக் கொள்ளலாம். இந்த தோல்வியை நினைத்து யாரும் வருத்தப்பட வேண்டாம். நாம் பல வெற்றிகளுக்குச் சொந்தக்காரர்கள். நமது இந்த தோல்வி தற்காலிகம்தான்" என்று ஸ்டாலின் கூறியுள்ளார்.

## "எங்களால் அதிமுக அலுவலகத்துக்கு எந்த பாதிப்பும் வராது" : சி.வி.சண்முகம்



சென்னை: மே.15–
"அதிமுக அலுவலகம் மீது ஒரு தூசிகூட படாது. எங்களால் அதற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது," என அதிமுக எம்எல்ஏ சி.வி.சண்முகம் தெரிவித்துள்ளார்.

அதிமுகவில் உட்கட்சிப் பூசல் நிலவி வரும் நிலையில், அரசியல் களம் பரபரப்புடன் காணப் படுகிறது. இந்நிலையில், சி.வி.சண்முகம் செய்தியாளர்களிடம் பேசும்போது,"இந்த ரத்தம் அதிமுகவின் ரத்தம். எங்களுக்கு பல பதவிகளைக் கொடுத்து அழகு பார்த்த இயக்கம் அதிமுக.

சட்டப்படி அதிமுகவின் உண்மையான தொண்டன் என்பதை நிரூபித்ததன் பின்னரே என் கால் அதிமுக அலுவலகத்தில் பதியும். அதிமுக அலுவலகம் எங்கள் கோயில். அதிமுக அலுவலகம் மீது ஒரு தூசிகூட படவோ, பாதிப்பு ஏற்படவோ அனுமதிக்க மாட்டோம். யாரும் அச்சப்பட வேண்டாம்" எனப் பேசினார்.

இதனிடையே, அதிமுக பிளவுபட்டுள்ள நிலையில், தங்கள் தரப்புகொறடாவை அங்கீகாரம் செய்ய வேண்டும் என சட்டப்பேரவைத் தலைவரை இபிஎஸ் தரப்பு மற்றும் சி.வி.சண்முகம் தரப்பு தனித்தனியாக நேரில் சென்று மனு அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## மகளிர் உரிமைத் தொகைத் திட்ட மறுசீரமைப்புக்கு அவகாசம் தேவை: முதல்வர் விஜய்

### –விரைவில் ரூ.1000 வரவு வைக்கப்படும்

சென்னை: மே.15–
"பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/ உரிமைத் தொகையாக வழங்கப்பட்டு வரும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தினை மறுசீரமைப்பு செய்ய அரசுக்கு உரிய கால அவகாசம் தேவைப்படு கிறது. ஆனால், மே 2026 மாதத்திற்கான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் விரைவில் வரவு வைக்கப்படும்." என தமிழக முதல்வர் விஜய் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், "மே 2026 மாதத்திற்கான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் விரைவில் வரவு வைக்கப் படும். பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/ உரிமைத் தொகையாக வழங்கப்பட்டு வரும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத் தினை மறுசீரமைப்பு செய்ய அரசுக்கு உரிய கால அவகாசம் தேவைப் படுகிறது. மே 2026 மாதத்திற்கான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, பயனாளிகளின் வங்கிக் கணக்கில் விரைவில் நேரடியாக வரவு வைக்கப்படும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த பிப்ரவரி 13ம் தேதியன்று, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் பயனாளிகளான 1.31 கோடி பேருக்கு ரூ.5 ஆயிரத்தை விடுவித்தது அப்போதைய திமுக அரசு. அதுமூன்றுமாதத்துக்கான முன்பணம் மற்றும் கோடை கால சிறப்புத் தொகை என விளக்கமளிக்கப்பட்டது. மேலும், மீண்டும் திமுக ஆட்சிக்கு வந்தால் மகளிர் உரிமைத் தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என அப்போதைய முதல்வர் ஸ்டாலின் வாக்குறுதி அளித்தார்.அதேபோல், அதிமுகவும் தனது தேர்தல் அறிக்கையில் தற்போது மகளிருக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர தொகை, ரூ.2000 ஆக உயர்த்தி வழங்கப்படும் எனத் தெரிவித்திருந்தது.

அந்தவரிசையில் தவெக தனது தேர்தல் அறிக்கையில் 65 வயது வரையிலான அனைத்து மகளிருக்கும் மாதம் ரூ.2500 வரவு வைக்கப்படும் என்றது. இது பெண்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. ஆனால், இப்போது பெண்களுக்கு மாதந் தோறும் ரூ.1000/ உரிமைத் தொகையாக வழங்கப் பட்டு வரும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தினை மறுசீரமைப்பு செய்ய அரசுக்கு உரிய கால அவகாசம் தேவைப்படுகிறது என்று கைவிரித்துள்ளது.

## பண்ருட்டி அருகே தென்பெண்ணை ஆற்றில் கற்கால ஆயுதம் கண்டெடுப்பு




கடலூர்: மே.15–
பண்ருட்டி அருகே உள்ள தென்பெண்ணை ஆற்றில் 50,000 ஆண்டுகள் பழமையான பழைய கற்கால ஆயுதம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. பண்ருட்டி அருகே உள்ள கண்டரக் கோட்டை தென்பெண்ணை ஆற்றில் தொல்லியல் ஆய்வாளர் இம்மானுவேல் மற்றும் வரலாற்று ஆர்வளர் பிரதாப் ஆகியோர் மேற்பரப்பு கள ஆய்வு மேற்கொண்டபோது பழைய கற்கால மக்கள் பயன்படுத்திய கற்கருவி ஒன்றை கண்டெடுத்தார். இதைக் குறித்து தொல்லியல் ஆய்வாளர் இம்மானுவேல் கூறியதாவது: கண்டரக் கோட்டை தென்பெண்ணை ஆற்றில் மேற்பரப்பு களஆய்வு மேற்கொண்டபோது பழைய கற்கால ஆயுதம் கண்டெடுக்கப்பட்டது.

கண்டரக்கோட்டை தென்பெண்ணை ஆற்றில் கண்டெடுத்த பழைய கற்கால கருவி சுமார் 7.8 செ.மீ நீளமும் , 5.7 செ.மீ அகலமும் கொண்டதாக உள்ளது,

பழைய கற்கால ஆயுதம்:

முதன் முதலில் ராபர்ட் புரூஸ்புட் என்ற இங்கிலாந்தின் நிலவியல் ஆய்வாளர் 1863ல் சென்னை அருகே உள்ள பல்லாவரத்தில் பழைய கற்கால கருவிகளைக் கண்டெடுத்தார். தமிழகத்தில் தொல்லியல் துறையினர் நடத்திய அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட பழைய கற்கால ஆயுதங்களை மூன்று காலங்களாக வரிசைப் படித்தியுள்ளனர் அவை :

1. கீழைப் பழங்கற் காலம் 17 லட்சம் முதல் 3.85 லட்சம் வரை பழமையானது,

2. இடைப் பழங்கற் காலம் 3.85 லட்சம் முதல் 80,000 வரை பழமை யானது

3 மேலைப் பழங்கற்காலம் 80,000 முதல் 40,000 வரை பழமையானது என கால வரிசைப்படுத்தியுள் ளனர்

17 லட்சம் முதல் 3.85 லட்சம் ஆண்டுகள் பழமையான கற்கருவிகள் தமிழகத்தில் தொல்லியல் துறையினரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. திருவள்ளுவர் மாவட்டம் அருகே உள்ள குடியம் குகைப் பகுதியில் சுமார் 30 இடங்களில் பழைய கற்கால கல்லாயுதங்களை தொல்லியல் அறிஞர் களால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சென்னைக்கு அருகில் இருக்கும் கொற்றலை ஆற்றின் சமவெளியிலும், செங்கல்பட்டு அருகே உள்ள பாலாறு, மதுரை, காஞ்சிபுரம், வேலூர், திருவள்ளூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, வட ஆர்க்காடு போன்ற மாவட்டங்களிலும் இத்தகைய கருவிகள் கண்டறியப்பட்டன, இக்கருவிகள் மிகவும் கரடுமுரடாகச் செதுக்கப்பட்டுள்ளன.

கல்லால் ஆன கருவி களோடு மரத்தாலான ஈட்டிகளையும் தண்டுகளையும் அக்கால மக்கள் கையாண்டதும் தெரிய வருகிறது. பழைய கற்காலத்தில் வாழ்ந்த மக்கள், குவார்ட்சைட் எனப்படும் கரடு முரடான கற்களை வேட்டையாடுவதற்குப் பயன்படுத்தினர். எனவே இக்காலத்திற்குப் பழைய கற்காலம் என்று பெயரிடப்பட்டது. கண்டரக்கோட்டை தென்பெண்ணை ஆற்றில் கண்டெடுத்த கல் ஆயுதம் மேலை பழங்கற்காலத்தை சேர்ந்த சுரண்டும் வகையைச் சேர்ந்த பழங்கால கல் ஆயுதமாகும்.

இதன் காலம் சுமார் 50,000 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாக இருக்கலாம், இதே போல சுரண்டும் வகை கல் ஆயுதம் விருத்தாச்சாலம் அருகே உள்ள பாலக்கொல்லை மற்றும் பண்ருட்டி அருகே உள்ள ஒடக்கன் குப்பம் பகுதிகளில் ஏற்கனவே ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டுள்ளது. பழைய கற்காலத்தில் மக்கள் நாடோடியாக வாழ்ந்தனர். இதன் பொருட்டு அவர்கள் பண்ருட்டி பகுதியில் பழங்கால மக்கள் இடம் பெயர்ந்து இருக்கலாம் அல்லது வெள்ளப் பெருக்கின் காரணமாக கூட இப்பகுதியில் கல் ஆயுதம் வந்திருக்கலாம் அதுமட்டும் அல்லாமல் இரண்டு மாதங்களுக்கு முன்பு உளுந்தாம்பட்டு தென்பெண்ணை ஆற்றில் பழங்கால மக்கள் பயன்படுத்திய சிறிய அளவிலான கிழிப்பான் (பிளேடு) கண்டறிந்தது குறிப்பிடத்தக்கது.

மேலும் இது தொடர்பாக தென் பெண்ணை ஆற்றங்கரை பகுதிகளில் மேற்பரப்பு கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தொல்லியல் ஆய்வாளர் இம்மானுவேல் கூறினார்.

**CHANGE NAME**

I, Shanmuga Prabu K, son of Thiru Kuppusamy, born on 18th April 1986 (District of Birth: Tiruppur), residing at No. 3/414-1, Santhai Road, South Avanashipalayam, Koduvai, Tiruppur-638 660, shall henceforth be known as K SHANMMUKAM

SHANMUGA PRABU. K

## ஊட்டியில் 21வது ரோஜா கண்காட்சி தொடங்கியது





நீலகிரி: மே.15–
நிலகிரி மாவட்டம் ஊட்டியில் கோடை விழாவின் பகுதியாக 21 வது ரோஜா கண்காட்சி தொடங்கியது. சமவெளி பகுதியில் கோடை வெயில் காரணமாக பிற மாவட்டங்கள் மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்துள்ளது. ஊட்டியில் தற்போது கோடை மழை பெய்து வருவதால் சுற்றுலா பயணிகள் ரசிக்கும் வகையில் காலநிலை நிலவுகிறது.

நீலகிரி மாவட்டம் நிர்வாகம் சார்பில் ஆண்டுதோறும் மே மாதம் மலர் கண்காட்சி, ரோஜா கண்காட்சி மற்றும் படகுகள் போட்டி உள்பட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. ஊட்டியில் உள்ள விஜயநகரம் பகுதியில் ரோஜா பூங்காவில் 21வது ரோஜா கண்காட்சி நேற்று தொடங்கி மே 18ஆம் தேதி வரை மொத்தம் 5 நாட்களுக்கு இக்கண் காட்சி நடைபெறுகிறது.

பூங்காவில் பாரம்பரிய ரோஜாக்களுக்கு தனியாக இடம் உள்ளது. பல்வேறு நாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்ட பாரம்பரியமிக்க ரோஜா செடிகள் நடவு செய்யப் பட்டு உள்ளதால், தற்போது மலர்கள் பூத்து உள்ளது. இந்த ஆண்டு ரோஜா பூங்காவில் பறவைகளை பாதுகாப்போம் என்று கருத்தை மையப்படுத்தி பல வண்ணங்களை கொண்ட ரோஜா மலர்களை கொண்டு அன்னப்பறவை, இருவாச்சி, கழுகு மற்றும் சிட்டுக்குருவி உள்ளிட்ட பறவைகளை வடிவமைக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் ஈர்த்து வருகிறது.

சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்து வருவதால் 5 நாட்கள் கண்காட்சி நடைபெற உள்ள நிலையில் மேலும் சில நாட்கள் கண்காட்சி நீட்டிக்கப்படும் என தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தெரிவித் துள்ளனர். இதனிடையே ரோஜா கண்காட்சிக்கு அடுத்தபடியாக ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா வில் மலர் கண்காட்சி நடத்துவதற்கு ஏற்பாடு களை தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் மேற் கொண்டு வருகின்றனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421